மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

19—

வீட்டுமனைப் பட்டா

***5256—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதி, 6—வது கோட்டம், தந்தை பெரியார் நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதி, 6—வது கோட்டம், தந்தை பெரியார் நகர் பகுதி என்பது 'கரடு புறம்போக்கு' என கிராமக் கணக்கில் பதிவாகியுள்ளது. மேலும், அஸ்தம்பட்டி 6—வது கோட்டம், தந்தை பெரியார் நகர் பகுதி என்பது மாநகராட்சி பகுதியிலிருந்து 8 கி.மீ. தொலைவிற்குட்பட்ட பகுதியாக உள்ளது. எனவே, அரசாணை எண் 3166, வருவாய்த் துறை, நாள் 6—11—1996—ன்படி, மாநகராட்சி பகுதியிலிருந்து 8 கி.மீ. தொலைவிற்குட்பட்ட பகுதிகளில் பட்டா வழங்க வழிவகை இல்லாத நிலை உள்ளது. எனினும், இப்பகுதியில் தற்போது குடிசை மாற்று வாரியத்தின் திட்டத்திற்காக நிலங்களைக் கண்டறியும் பணி வருவாய்த் துறையால் நடைபெற்று வருகிறது. தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு வருங்காலத் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்

2017 ஜூன் 15]

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதி, 6—வது கோட்டத்தில் தந்தை பெரியார் நகர் பகுதி அமைந்துள்ளது. அந்தப் பகுதியில், 500—க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றன. அந்தப் பகுதியிலே, ஒரு பகுதியிலுள்ள 170 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டன; அந்தக் குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியத்தால் அங்குள்ள மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். எனவே, மீதமுள்ள 350—க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் நீண்ட காலமாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே வசிக்கும் மக்களுக்கும் பட்டா வழங்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—10

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நிலையான கொள்கையாகும். அந்த வகையிலே வீடற்ற ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற நாள் முதல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை தலைமைதாங்கி வழிநடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசின் இந்த நாள் வரை, ஏறத்தாழ 14 இலட்சம் என இலக்கு வைத்து பதினாறரை இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

சார்ந்திருக்கின்ற அந்தப் பகுதியிலே அது ஆட்சேபகரமான புறம்போக்காகவும், தடையாணை பெறப்பட்ட பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினாலே, அதற்கு மாற்று ஏற்பாடாக 'Housing for all' என்கின்ற திட்டத்தின் கீழே அவர்களுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய வகையிலே ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு பட்டாக்களும், வீடுகளும் வழங்குவதற்கான திட்டம் முன்னுரிமை அடிப்படையிலே செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அரசாணை எண் 3166 பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அரசாணையைக் காரணம் காட்டி, ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு பட்டா வழங்க மறுப்பது முறையாக இருக்காது. அந்த அரசாணையைத் தளர்த்தியோ அல்லது ரத்து செய்தோ, புதிதாக ஓர் அரசாணை வழங்கியோ அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணையைத் தளர்த்துவதற்கு 'One time special scheme' என்கின்ற regularisation scheme ஏற்கெனவே தேவைப்படுகின்ற நேரங்களிலே, காலங்களிலே செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து தேவையா என்பதை ஆய்வு செய்வதற்காக அந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது. ஆகவே, தற்போது தடையாணை அமலில் இருக்கின்ற காரணத்தினாலே, அதை regularisation செய்ய முடியாததால் தர இயலவில்லை. ஆனாலும், வருவாய்த் துறை நிலையாணை எண் 21–ன் கீழே வழங்கப்படுகின்ற பட்டாக்களையும்,

2017 ஜூன் 15]

வருவாய்த் துறை நிலையாணை எண் 21(6)—ன் கீழே வழங்கப்படுகின்ற பட்டாக்களையும் மாவட்ட ஆட்சியர்களோ, கோட்டாட்சியர்களோ வரன்முறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தகுதியான நிலங்களாக இருந்தால் தடையாணை இருந்தாலும்கூட அதை 21(6)—ன் கீழே வரன்முறைபடுத்தலாம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

பேருந்து வசதி

***4649—திரு. அ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, காந்திபுரம் முதல் ரங்கேகவுண்டன்புதூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது ரங்கேகவுண்டன்புதூருக்கு காந்திபுரத்திலிருந்து ஒரு நகரப் பேருந்து மூலமாக தினசரி 18 நடைகளும், கிணத்துக்கடவிலிருந்து ரங்கேகவுண்டன்புதூருக்கு ஒரு நகரப் பேருந்து மூலமாக தினசரி 11 நடைகளும் ஆக மொத்தம் இரண்டு பேருந்துகள் மூலமாக தினசரி 29 நடைகள் தற்போதைய பயணிகளின் அடர்விற்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே அப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில்